ඉඩම කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
LAND COMMISSIONER GENERAL'S DEPARTMENT
ඉඩම් මහලේකම් කාර්යාලය, නො: 1200/6, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
காணி செயலகம், இல: 1200/6, ராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.
Land Secretariat, No: 1200/6, Rajamalwatta Road, Battaramulla.

# அறிவித்தல்

## வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரச காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் விசேட துரித வேலைத்திட்டம்.

## (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வந்த மோதல் சூழ்நிலை முற்றுப் பெற்றுள்ளதைத் தொடர்ந்து அம் மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் முகங்கொடுத்து வரும் அரசாங்கக் காணிகள் தொடர்பிலான பிரச்சினைகளை துரிதமாக தீர்த்து வைப்பதற்கான விசேட வேலைத் திட்டமொன்றை, அம் மாகாணங்களைச் சேர்ந்த மாகாணக் காணி ஆணையாளர்களினதும், பிரதேச செயலாளர்களினதும், அரசாங்க அதிபர்களினதும் ஒத்துழைப்புடன் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் அமுல் செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் வடக்கு அல்லது கிழக்கு மாகாணத்தில் -**

- அரசாங்கக் காணியொன்றின் உடைமையை சட்டரீதியாக அனுபவித்த அல்லது தற்சமயம் அனுபவித்து வரும் ஒருவரா?
- அரசாங்கக் காணியொன்றின் உடைமையை அத்துமீறி அனுபவித்த அல்லது தற்சமயம் அனுபவித்து வரும் ஒருவரா?
- அரசாங்கக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்திருந்த அல்லது அரசாங்கக் காணித் துண்டொன்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்திருக்கும் அம் மாகாணங்களில் வசிக்கும் ஒருவரா?

**அவ்வாறெனில், குறித்த காணி தொடர்பில் நீங்கள் முகங் கொடுத்து வரும் ஏதேனும் பிரச்சினை(சிக்கல்) காணப்படுகின்றதா?**

- நீங்கள் முகங் கொடுத்துள்ள காணிப் பிரச்சினையை, உங்களது காணி அமையப் பெற்றுள்ள பிரதேசத்திற்குரிய கிராம உத்தியோகத்தருடாக அல்லது தபால் மூலம் அல்லது நேரடியாக வந்து உங்களது காணி அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கவும்.

- இதற்காக உபயோகிக்க வேண்டிய உரிய மாதிரிப் படிவத்தை கிராம உத்தியோகத்தரிடமிருந்து அல்லது பிரதேச செயலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.
- இம் மாதிரிப் படிவத்தை காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இணைத் தளத்திறூடாகவும் (www.landcommdep.gov.lk) இறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- உங்களது காணிப் பிரச்சினை அடங்கிய படிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான பதிவிலக்கத்துடன் பற்றுச்சீட்டொன்றும் உங்களுக்கு விநியோகிக்கப்படும்.
- உங்களது காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை பிரதேச செயலகத்தினால் எடுக்கப்படும்.
- இது விடயம் தொடர்பில் உங்களுக்கு அறிவிக்கப்படும் போது, தேவையான சகல ஒத்துழைப்பையும வழங்கவும்.
- உங்களது காணிப் பிரச்சினை தொடர்பில் கேட்டறிவதற்கு உங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பதிவிலக்கத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குறிப்பிடவும்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள அனைத்து பிரதேச செயலகங்கள் மூலமும், வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாகாணக் காணி ஆணையாளர் அலுவலகங்கள் மூலமும் அல்லது காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் வடக்கு, கிழக்கு அலகு மூலமும் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு மேலதிகமாக, காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2013/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கையை அல்லது அவ் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள இதனுடன் தொடர்புடைய அறிவித்தல்களை நோக்குவதன் மூலமும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

*ஆர்.பீ.ஆர். ராஜபக்ஷ*
**காணி ஆணையாளர் நாயகம்**

காணி, ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர"
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
**2013.**